**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ஆம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண்.6/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.49/2021**

1. அருள்மொழி
2. பார்த்திபன் ...... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. சக்திவேல் ......1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
2. வெங்கடேசன் ......2ம் எதிர்மனுதாரர்/Proposed 2ம் பிரதிவாதி
3. வட்டாட்சியர், மானாமதுரை
4. மாவட்ட ஆட்சியர் அவர்கள், சிவகங்கை.

......3, 4 எதிர்மனுதாரர்கள்/Proposed 3, 4 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 16.04.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பிரபு அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிலிருந்து தோன்றாதரப்பினராக்கப்பட்டும் உள்ள நிலையில், மனுதார் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 6 ரூல். 16, 17 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

தாவா வழக்கில் காயாம்பு மகன் வெங்கடேசன் என்பவரை 2ம் எதிர்மனுதார் 2ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்க்கச் சொல்லி மனுத்தாக்கல் செய்ததில், மேற்படி மனுவும் ஐ.ஏ.எண்.4/2024 என்ற எண்ணில் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே போல் மானாமதுரை வட்டாட்சியர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களை

3, 4 பிரதிவாதிகளாக சேர்க்கச் சொல்லி மனுத்தாக்கல் செய்ததில் மேற்படி மனுவும் ஐ.ஏ.எண்.5/2024 என்ற எண்ணில் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே 2, 3, 4 பிரதிவாதிகளை சேர்த்து மேற்படியார்களையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு பெற வேண்டியது அவசியமாக உள்ளது என்பதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் இல்லை.

**5.** **இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.4/2024, 5/2024 அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் Consequential Amendment ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஏப்ரல் 17ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.17 18:00:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.17 18:00:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 6/2025**

**in**

**OS.No. 49/2021**

**<u>Order</u>**

**Dated 17.04.2025**